**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு.S.கணேஷ்., எம்.காம்., எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**2024ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 23–ஆம் நாள் வெள்ளிக்கிழமை**
**IA.03/2024 in O.S.90/2015**

பாண்டியன், ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. ராயர்,
2. வேல்முருகன்,
3. செந்தில்குமார்,
4. கணேசன்,
5. பாக்கியராஜ்,
6. ஜெய்சங்கர்,
7. திவாகர், ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இறுதியாக 14.08.2024–அன்று விசாரணைக்கு வந்ததில் மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சுரேஷ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.முருகேசன் அவர்கள் முன்னிலையாகியும், மனு, பிரமாணவாக்குமூலம் மற்றும் எதிருரை ஆகியவற்றை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்...

**உத்தரவு**

இம்மனுவானது அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களுக்காக சமூகம் கோர்ட்டாரவர்கள் தயவு செய்து இம்மனுவில் கண்ட நபர்களுக்கு நீதிமன்றம் மூலம் முறையே சாட்சி சம்மன் அனுப்பி விசாரணை செய்ய உத்திரவாக வேண்டி சி.பி.சி. ஆர்டர் 16 ரூல் 1–ன் படி இம்மனு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரரின் மனுவின் சுருக்கம் :–**

இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதி என்றும், எதிர்மனுதாரர் பெயரில் வழக்கு தொடர்ந்து அதில் மனுதாரர் தரப்பு இதர சாட்சிகளுக்காக வேண்டி 06.07.2024ல் வாய்தா உள்ள நிலையில் மனுதாரர் தரப்பு சாட்சியாக விசாரிக்க வேண்டிய நபர்கள் நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்தால்தான் சாட்சி சொல்ல வருவதாக கூறுவதால் மனுவில் கண்ட நபர்களுக்கு நீதிமன்ற மூலம் முறையே சாட்சி சம்மன் அனுப்பி விசாரணை செய்ய உத்திரவாக வேண்டியது அவசியமும்,

நியாயமுமாயிருக்கிறது இல்லையேல், மனுதாரருக்கு வீண் கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்று குறிப்பிட்டு இம்மனு மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>1ம் எதிர்மனுதாரரின் எதிருரையின் சுருக்கம்</u>

மனுதாரரின் மனு அபிடவிட் விவர அடிப்படையில் இம்மனு அனுமதிக்க உகந்ததல்ல என்றும், இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சாட்சிகளை கோர்ட் மூலம் சாட்சி சம்மன் அனுப்பி விசாரிக்க விழையும் காரணம் ஏதும் மனு அபிடவிட்டில் கூறப்படவில்லை என்றும், மேற்படி வழக்கு விசாரணை தொடங்கும் முன்பாக எவ்வித சாட்சிய பட்டியலும் மனுதாரர் தாக்கல் செய்யவுமில்லை, இதுபோன்ற மனு எவ்வித காரணமும் கூறாத நிலையிலும், as a routine matter of right என்ற தவறான நிலைப்பாட்டினை மனுதாரர் கொண்டு இம்மனு தாக்கல் செய்யப்பட்டு உள்ளது என்றும், இது ஒரு Bare injunction பரிகாரம் மட்டும் கோரி தாக்கல் செய்யப்பட்டு வழக்கு கடந்த 9 வருடங்களுக்கு மேலாக மனுதாரர் பல வழக்கிடை மனுக்களை தாக்கல் செய்து காலம் கடத்தி வந்து, விசாரணை தொடங்கி P.W.1 ஆக மனுதாரரை விசாரித்த பின்பு, இவ்வழக்கில் ஏற்படும் முடிவினை மேலும் காலம் கடத்த திட்டமிட்டு மனு தாக்கல் செய்யப்பட்டு உள்ளது என்றும், மனுதாரர் தரப்பில் பிராதிலோ P.W.1 சாட்யத்திலோ மனுவில் கூறும் சாட்சிகளை பற்றி சாட்சியம் ஏதும் இல்லை என்றும், தவிரவும் இவ்வழக்கில் எதனை எண்பிக்க மனுவில் கூறியுள்ள சாட்சிகளை விசாரிக்க அனுமதி கோருவதாக மனு அபிடவிட் விவரங்களில் கூறப்படவில்லை என்றும், இவ்வழக்கின் தன்மைக்கும், சூழ்நிலைக்கும் இம்மனு மூலம் சாட்சி சம்மன் அனுப்ப கோரும் சாட்சிகள் அவசியமல்ல என்றும், சாட்சி சம்மன் அனுப்ப தகுந்த காரணங்கள் ஏதும் இம்மனு அபிடவிட்டில் கூறப்படாத காரணத்தால் மனு வழக்கு விசாரணையை காலம் கடத்த திட்டமிட்டே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இம்மனு மூலம் குறிப்பிட்டுள்ள சாட்சிகளுக்கு சாட்சி சம்மன் அனுப்ப தகுந்த காரணம் ஏதும் கூறப்படாத நிலையில் சி.பி.சி.ஆர்டர் 16 ரூல் 1ன்படி தாக்கல் செய்யும் மனு வழக்கு விசாரணையை காலம் கடத்தும் யுக்தியாக கொள்ள வேண்டி சட்ட முன் தீர்ப்புகள் உள்ள நிலையில் மனு அனுமதிக்க உகந்ததல்ல என்றும், ஆகையால் சமூகம் கோர்ட்டாரவர்கள் தயவு

செய்து மனுதாரரின் மனுவினை இவ்வெதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டு இவ்வெதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சானறாவணம் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவேனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பது தான்.

<u>6) பிரச்சனைக்கான தீர்வு:–</u>

மனுதாரர் தரப்பு வாதத்தில் இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதி என்றும், மேற்படி எதிர்மனுதாரர் பெயரில் வழக்கு தொடர்ந்து அதில் மனுதாரர் தரப்பு இதர சாட்சிகளுக்காக வேண்டி 06.07.2024 ல் வாய்தா உள்ள நிலையில் மனுதாரர் தரப்பு சாட்சியாக விசாரிக்க வேண்டிய நபர்கள் நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்தால்தான் சாட்சி சொல்ல வருவதாக கூறுவதால் மனுவில் கண்ட நபர்களுக்கு நீதிமன்ற மூலம் முறையே சாட்சி சம்மன் அனுப்பி விசாரணை செய்ய உத்திரவாக வேண்டியது அவசியமும், நியாயமுமாயிருக்கிறது இல்லையேல், மனுதாரருக்கு வீண் கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்று குறிப்பிட்டு வாதத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

7. எதிர்மனுதாரர் தரப்பு வாதத்தில் மனுதாரரின் மனு அபிடவிட் விவர அடிப்படையில் இம்மனு அனுமதிக்க உகந்ததல்ல என்றும், இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சாட்சிகளை கோர்ட் மூலம் சாட்சி சம்மன் அனுப்பி விசாரிக்க விழையும் காரணம் ஏதும் மனு அபிடவிட்டில் கூறப்படவில்லை என்றும், மேற்படி வழக்கு விசாரணை தொடங்கும் முன்பாக எவ்வித சாட்சிய பட்டியலும் மனுதாரர் தாக்கல் செய்யவுமில்லை, இதுபோன்ற மனு எவ்வித காரணமும் கூறாத நிலையிலும், as a routine matter of right என்ற தவறான நிலைப்பாட்டினை மனுதாரர் கொண்டு இம்மனு தாக்கல் செய்யப்பட்டு உள்ளது என்றும், இது ஒரு Bare injunction பரிகாரம் மட்டும் கோரி தாக்கல் செய்யப்பட்டு வழக்கு கடந்த 9 வருடங்களுக்கு மேலாக மனுதாரர் பல வழக்கிடை மனுக்களை தாக்கல் செய்து காலம் கடத்தி வந்து, விசாரணை தொடங்கி P.W.1 ஆக மனுதாரரை விசாரித்த பின்பு, இவ்வழக்கில்

ஏற்படும் முடிவினை மேலும் காலம் கடத்த திட்டமிட்டு மனு தாக்கல் செய்யப்பட்டு உள்ளது என்றும், மனுதாரர் தரப்பில் பிராதிலோ P.W.1 சாட்யத்திலோ மனுவில் கூறும் சாட்சிகளை பற்றி சாட்சியம் ஏதும் இல்லை என்றும், தவிரவும் இவ்வழக்கில் எதனை எண்பிக்க மனுவில் கூறியுள்ள சாட்சிகளை விசாரிக்க அனுமதி கோருவதாக மனு அபிடவிட் விவரங்களில் கூறப்படவில்லை என்றும், இவ்வழக்கின் தன்மைக்கும், சூழ்நிலைக்கும் இம்மனு மூலம் சாட்சி சம்மன் அனுப்ப கோரும் சாட்சிகள் அவசியமல்ல என்றும், சாட்சி சம்மன் அனுப்ப தகுந்த காரணங்கள் ஏதும் இம்மனு அபிடவிட்டில் கூறப்படாத காரணத்தால் மனு வழக்கு விசாரணையை காலம் கடத்த திட்டமிட்டே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இம்மனு மூலம் குறிப்பிட்டுள்ள சாட்சிகளுக்கு சாட்சி சம்மன் அனுப்ப தகுந்த காரணம் ஏதும் கூறப்படாத நிலையில் சி.பி.சி.ஆர்டர் 16 ரூல் 1 ன்படி தாக்கல் செய்யும் மனு வழக்கு விசாரணையை காலம் கடத்தும் யுக்தியாக கொள்ள வேண்டி சட்ட முன் தீர்ப்புகள் உள்ள நிலையில் மனு அனுமதிக்க உகந்ததல்ல என்று வாதத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

8. இருதரப்பிலும் மேற்சொன்னவாறு எடுத்துரைக்கப்பட்ட சங்கதிகளை இந்நீதிமன்றம் தீர பரிசீலித்ததில், மனுதாரர் தாக்கல் செய்துள்ள வழக்குரையிலும், வா.சா.1 முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்திலும், இம்மனுவில் கூறும் சாட்சிகளை பற்றி சாட்சியம் ஏதும் இல்லை, மேலும் இவ்வழக்கில் எதனை நிரூபணம் செய்ய இம்மனுவில் கூறியுள்ள சாட்சிகளை விசாரிக்க அனுமதி கோரும் விவரம் மனுவில் கூறப்படவிலலை, இதனை பரிசீலனை செய்கையில் எதிர்மனுதாரர் எதிருரையில் சொல்லும் மறுப்புரை ஏற்றுக்கொள்ளகூடியதாக உள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

9. மேலும் அசல் வழக்கினை பரிசீலனை செய்து பார்க்கையில் வழக்கு விசாரணை தொடங்கும் முன்பாக எவ்வித சாட்சிய பட்டியலும் மனுதாரர் தாக்கல் செய்யவில்லை என்பதும், இதுபோன்ற மனு எவ்வித காரணமும் கூறாத நிலையிலும் as a routine matter of right என்ற தவறான நிலைப்பாட்டினை கொண்டு மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு நீதிக்கு உகந்ததாக இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

10. மேலும், இம்மனுவினை அனுமதித்தால் தேவையற்ற குழப்பமும், அசல் வழக்கில் ஒரு நல்ல தீர்வு ஏற்படுவதில் தெளிவற்றும் காணப்படும். மேலும், மனுதாரர் அசல் வழக்கினை காலம் கடத்த வேண்டும் என்ற நோக்கத்தில் வழக்கு விசாரணையில் உள்ள போது இதுபோன்ற மனுவை தாக்கல் செய்துள்ளார். மேலும், வழக்கு தாக்கல் செய்து 9 வருடங்களுக்கு மேலாக நிலுவையில் இருந்துவருவதையும் கருத்தில் கொண்டு இதுபோன்ற தேவையற்ற மனுவை அனுமதிப்பதால் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

11. முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2024ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 23–ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

S GANESH Digitally signed by S GANESH
Date: 2024.08.23 16:31:21 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:
– இல்லை –

S GANESH Digitally signed by S GANESH
Date: 2024.08.23 16:31:25 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.